# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 ஜுன் திங்கள் 23–ம் நாள் (23.06.2014) திங்கள்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சியில் மேலாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.05.2014–ல் ஓய்வுபெற்ற திரு.பூ.சந்திரன் அவர்களுக்கு சிறப்பு சேமநல நிதி அரசு பங்குத் தொகை ரூ.10,000/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.சி1/1341/2014)

**தீர்மானம் எண்.905 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

மக்களவை தேர்தல் 2014–ஐ முன்னிட்டு இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 10 வாக்குச் சாவடிகளுக்கு குடிநீர் வசதி செய்தவகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.3,620/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.சி1/1361/2014)

**தீர்மானம் எண்.906 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்கு உரக்கிடங்கு அமைப்பதற்காக மாவட்ட நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள லியோன்நகர் உப்பளம் நிலத்தில் உரக்கிடங்கு அமைப்பதற்கான உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி இடத்தில் உரக்கிடங்கு அமையும் பட்சத்தில் பொது சுகாதாரக் கேடு ஏற்படும் என்ற ஒரு சிலரின் அச்சத்தை போக்கும் வகையில், இந்நகராட்சியின் ஆணையாளர், பொறியாளர், சுகாதார அலுவலர் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோருக்கு வசிப்பதற்கான குடியிருப்புகள் கட்டும் பணியினை மேற்கொள்வதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 275.00 இலட்சத்திற்கு திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1226/2014)

**தீர்மானம் எண்.907 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி பகுதிகளில் 40 வாட்ஸ் குழல் விளக்குகள் 1240 எண்ணம், 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் 37 எண்ணம், LED விளக்குகள் 70 எண்ணம், CFL விளக்குகள் 185 எண்ணம், உயர் கோபுர மின்விளக்குகள் 5 எண்ணம் என மொத்தம் 1536 விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தெருவிளக்குகளை பராமரிப்பதற்காக 2014–15–ம் ஆண்டு தேவைப்படும் மின் உதிரிப் பாகங்கள் வாங்குவதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1167/2014

**தீர்மானம் எண்.908 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24–ல் காமராஜர் சாலை பகுதியில் சாஸ்தான்கரை சாலையிலிருந்து நரிக்கல் சாலை வரை உள்ள வடிகால் ஓடையின் மேல் ஏற்கனவே மேல்மூடி அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை குறுகலாக உள்ளதால் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு ஏதுவாக வடிகால் ஓடையின் மேல் உள்ள நடைபாதையில் டைல்ஸ் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9,20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/1334/14)

**தீர்மானம் எண்.909 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,30,550/–ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.839 நாள் 21.02.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் பின்னர் நகராட்சி நிதிநிலை திருப்திகரமாக இல்லாத காரணத்தால் மேற்படி தொகையினை உரிய காலத்திற்குள் செலுத்த இயலவில்லை. இதனால் விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட்டதாக தமிழ்நாடு மின்சார வாரியத்தால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி தெருவிளக்குகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தெருவிளக்குகள் அமைப்பதற்கு மீண்டும் விண்ணபிக்கப்பட்டதில், திருத்திய மதிப்பீட்டு கட்டணமாக ரூ.1,50,330/– ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டது. பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கும், திருத்திய மதிப்பீட்டு தொகைக்கும் உள்ள வித்தியாச தொகை ரூ.20,000/– க்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,50,330/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/4378/2010)

**தீர்மானம் எண்.910 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்காக சேதப்படுத்தப்படும் சாலைகள், வடிகால் ஓடைகள், மூடு சிலாப்கள் மற்றும் வால்வு பிட்கள் ஆகியவற்றை உடனுக்குடன் சரி செய்வதற்கான 2014–15–ம் வருடாந்திர பராமரிப்பு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 4,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1333/2014)

**தீர்மானம் எண்.911 ரத்து செய்யப்படுகிறது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்கு உரக்கிடங்கு அமைப்பதற்காக லியோன் நகர் உப்பளம் பகுதியில் மாவட்ட நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமத் திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி இடத்தில் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவில் மண் நிரப்பப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்றுள்ளது. தற்போது மீதமுள்ள நிலத்தில் துறைமுகப் பணிகளுக்காக, குளச்சல் கடற்கரை பகுதியில் தோண்டப்படும் மண்ணை இப்பகுதியில் கொட்டுவதற்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரடியாக அனுமதி வழங்கியுள்ளதால், துறைமுகப் பகுதியிலிருந்து மண்ணை வாகனங்கள் மூலம் லியோன் நகர் உப்பளம் பகுதிக்கு கொண்டு சென்று கொட்டி நிரப்பும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 9,80,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1332/2014)

**தீர்மானம் எண்.912 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பகுதிகளில் வறட்சி காலத்தில் தட்டுபாடின்றி சீரான குடிநீர் வினியோகம் செய்வதற்கு ரூ.35,00,000/– மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 863 நாள் 21.12.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 28.02.2014 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தத்தாரர் பெயர் மற்றும் மதிப்பீட்டு விகித விவரம் | |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பாலத்தன்கரை ஆழ்துளை கிணற்றை துார் வாரி சுத்தம் செய்தல். | ரூ. 20,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.91% அதிகம். |
| 2 | இந்நகராட்சி கே.எஸ்.எஸ்.எஸ். காலனி ஆழ்துளை கிணற்றை துார் வாரி சுத்தம் செய்தல். | 20,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.91% அதிகம். |
| 3 | இந்நகராட்சி வெள்ளிப் பிள்ளையார் கோவில் ஆழ்துளை கிணற்றை துார் வாரி சுத்தம் செய்தல். | 20,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.91% அதிகம். |
| 4 | இந்நகராட்சி பாலத்தன்கரை ஆழ்துளை கிணற்றின் 10 HP மின் மோட்டாரை மாற்றி, புதிய 10HP மின் மோட்டார் பொருத்துதல். | 70,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.22% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.34% அதிகம். |
| 5 | இந்நகராட்சி கே.எஸ்.எஸ்.எஸ். காலனி ஆழ்துளை கிணற்றின் 10 HP மின்மோட்டாரை மாற்றி புதிய 10HP மின் மோட்டார் பொருத்துதல். | 70,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.22% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.34% அதிகம். |
| 6 | இந்நகராட்சி வெள்ளிப் பிள்ளையார் கோவில் ஆழ்துளை கிணற்றில் 10 HP மின்மோட்டாரை மாற்றி புதிய 10HP மின் மோட்டார் பொருத்துதல். | 70,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.22% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.34% அதிகம். |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் மரமடி சந்திப்பு வரை HDPE Pipe line அமைத்தல். | 1,80,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.53% அதிகம். |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் 3" பிவிசி குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்தல். | 50,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.46% அதிகம். |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட தொலைபேசி நிலைய சாலையின் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல். | 5,00,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.27% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.77% அதிகம். |
| 10 | இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன் கரையில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல். | 5,00,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.27% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.77% அதிகம். |
| 11 | இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப் பிள்ளையார்கோவில் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல். | 5,00,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.27% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.77% அதிகம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் முதல் தைநாத்தன்கரை வரை 3''பிவிசி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல். | 70,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.25% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 1.08% அதிகம். |
| 13 | இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான் கரை முதல் வெள்ளியாகுளம் வரை 4''பிவிசி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல். | 8,00,000/– | திரு.சி.சந்திரசேகர் மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. | திரு.சி.செல்லநாடார் மதிப்பீட்டைவிட 0.83% அதிகம். |

மேற்படி பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) குடிநீர் வினியோக பணிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் அளித்த திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பின்னரும் திட்ட நிதி விடுவிக்கப்படாததால், குடிநீர் வினியோகத்தில் மேற்படி பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/337/2014)

**தீர்மானம் எண்.913 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பொது நிதியின்கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண். 10**

குளச்சல் நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு 2014–15–ம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் Schedule of Rate இதுநாள் வரையிலும் பெறப்படாத காரணத்தால் பொதுமக்கள் நலன் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கீழ்க்காணும் பொருள்களுக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ.எண். | பொருட்களின் விவரம் | யூனிட் | 15 mm விட்டம் | 20 mm விட்டம் |
|---|---|---|---|---|
| 1 | ஜி.ஐ. பைப் | 1 மீ | 84.00 | 110.00 |
| 2 | ஜி.ஐ. கப்.பிளிங் | 1 எண்ணம் | 17.00 | 19.50 |
| 3 | ஜி.ஐ.எல்போ | " | 16.00 | 23.50 |
| 4 | ஜி.ஐ.பெண்ட் | " | 19.50 | 24.50 |
| 5 | Brass screw down Bib cocks | " | 198.00 | 248.00 |
| 6 | ஜி.ஐ. டீ (கூநந) | " | 24.00 | 44.00 |
| 7 | ஜி.எம். மெயின் காக் | " | 195.00 | 241.00 |
| 8 | வாட்டர் மீட்டர் | " | 990.00 | 1131.00 |
| 9 | ஜி.ஐ.ரெடியூசர் 3/4'' x ½'' | " | 15.00 | 21.00 |
| 10 | புளோ கண்ட்ரோல் வால்வு | " | 148.00 | 168.00 |
| 11 | சி.ஐ. சர்பேஸ் பாக்ஸ் | " | 210.00 | 210.00 |
| 12 | ஜி.ஐ. சாடில் | " | 90.00 | 90.00 |
| 13 | மேசன்டிரி சேம்பர் | " | 685.00 | 685.00 |
| 14 | ஜி.எம். வீல் வால்வு | " | 250.00 | 342.00 |
| 15 | எம்.எஸ். கிளாம்பு | " | 5.25 | 6.30 |
| 16 | ஜி.எம். செக் வால்வு | " | 250.00 | 342.00 |
| 17 | சி.ஐ.செக் நெட் | " | 9.00 | 13.00 |
| 18 | ஜி.ஐ.பெருல் | " | 305.00 | 406.00 |
| 19 | ஜி.ஐ.நிப்பிள் | " | 32.00 | 32.00 |
| 20 | ஜி.ஐ.யூனியன் | " | 45.00 | 56.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | ஜி.ஐ.பைப் பதித்தல் | 1 மீ | 10.50 | 10.50 |
| 22 | ஜி.ஐ. பைப் மரை போடுத்ல் | 1 எண்ணம் | 7.00 | 7.00 |
| 23 | பெரூல், சாடில் யூனியன் பொருத்துதல். | ” | 12.00 | 12.00 |
| 24 | மீட்டர் பொருத்துதல் | “ | 45.00 | 45.00 |
| 25 | மண் தோண்டுதல் | 1 மீ. | 119.30 | 119.30 |
| 26 | மேற்பார்வை கட்டணம் | | மொத்த தொகையில் 15% | |
| 27 | குறைந்தபட்ச தொகை | | ரூ. 750/– | |

மேலும் குழாய் பதிக்க தோண்டப்படும் இடத்தை சீரமைப்பதற்காக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையில் 5ரூ உயர்வு செய்து தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை குறித்த விவரம் பின்வருமாறு :

| வ.எண். | சாலையின் தன்மை | 0.30 மீட்டர் நீளத்திற்கு ரூ. | 30. 90 மீட்டர் நீளத்திற்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | சிமெண்ட் தளம் | 3319.05 | 4083.45 |
| 2 | தார் சாலை | 2871.75 | 3638.25 |
| 3 | கருங்கல் சல்லி சாலை | 1340.85 | 2107.35 |

மேற்கண்ட விலை விகிதத்தில் இனிமேல் வழங்கப்படவுள்ள குடிநீர் இணைப்பிற்கான திருத்திய மதிப்பீட்டை இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/7063/2011)

**தீர்மானம் எண்.914 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–ல் கதவு எண்.12/67 கட்டிடத்தின் குடிநீர் இணைப்பை மனுதாரர் 28.05.2014 அன்று தற்காலிகமாக துண்டிப்பு செய்ய கோரியுள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று கதவு எண்.12/67–ல் உள்ள குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1218/2014)

**தீர்மானம் எண்.915 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் திரு.ராபின்சன் என்பவரின் கட்டிடத்தின் கதவு எண்.7/10 மற்றும் குடிநீர் இணைப்பு எண்.1505–ன் மீது வரி நிலுவை அதிகமாக இருந்த காரணத்தினால் 21.03.2013–ல் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் நிலுவைத் தொகை முழுவதும் செலுத்தி குடிநீர் இணைப்பு மீண்டும் வழங்க கோரியுள்ளதால், குடிநீர் அத்தியாவசியம் கருதி 10.06.2014 அன்று இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மீண்டும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று குடிநீர் இணைப்பு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ2/703/2014)

**தீர்மானம் எண்.916 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட அழகனார்கோட்டை விளையில் அமைந்துள்ள கதவு எண்.27/1.எ–யின் குடிநீர் இணைப்பு 15.03.2012 அன்று சொத்துவரி குடிநீர் கட்டணம் நிலுவை இருந்த காரணத்தால் துண்டிப்பு செய்யப்பட்டது. மனுதாரர் குடிநீர் கட்டணம் மற்றும் சொத்துவரி நிலுவைத் தொகை முழுவதையும் அலுவலகத்தில் செலுத்தி மீண்டும் 20.05.2014 அன்று குடிநீர் இணைப்பு

வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார். எனவே மனதாரரின் வேண்டுகோளுக்கு இணங்க துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1135/2014)

**தீர்மானம் எண்.917 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சியின் கணனிகள், சர்வர் மற்றும் பிரிண்டர்களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) 31.05.2014–வுடன் முடிவடைகிறது. AMC ஏற்படுத்திக் கொண்ட HCL நிறுவனத்தார் கடந்த வருடம் நல்லமுறையில் பராமரித்து தந்துள்ளார்கள். தற்போது 01.06.2014 முதல் 31.05.2015 வரையிலான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) புதுப்பிக்க கடிதம் வரப்பெற்றுள்ளது. பணியின் அவசியம் கருதி வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) புதுப்பித்துக் கொள்ள ரூ.65,048/– க்கு மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/544/06)

**தீர்மானம் எண்.918 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

கல்லுக்கூட்டம் பேரூராட்சிக்குட்பட்ட லெட்சுமிபுரம் வில்லேஜ் பகுதியில் நகர புல எண்.757/2 -ல் 3.200 செண்ட் வழிப்பாதை இடத்தினை திருமதி. ஆமீனா, த/பெ.அசன்கான், கதவு எண்.10.H/10, புன்னைநகர், நாகர்கோவில் அவர்கள் நகராட்சிக்கு பாதையை நன்கொடை பத்திரம் எண்.608/2014–ன்படி நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளனர். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : நன்கொடை பத்திரம் பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi-998/14)

**தீர்மானம் எண்.919 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 23–வது வார்டு சாஸ்தன்கரை பகுதியில் நகர புல எண்.P2-1/12, P2-1/17, P2-3/15, P2-3/14, P2-3/16, P2-3/17, P2-3/16, P2-1/13-ல் 5.935 செண்ட் வழிப்பாதை இடத்தினை திரு.ஆறுமுகக்கண் நாடார் அவர்கள் மகன் (1) திரு.எ.அன்பையன், சாஸ்தாங்கரை, (2) திரு.ஆறுமுகக்கண் நாடார் அவர்கள் மகன் திரு.செல்லத்துரை, சாஸ்தன்கரை, (3) திரு.பொன்னம்பலம் நாடார் அவர்கள் மகன் திரு.பி.ராஜமணி, நாராயணநகர், கதவு எண்.2/340–ல் (4) திரு.றசல் அவர்களின் மகன் திரு.ரெகு, களிமார் மற்றும் (5) திரு.ராஜ ரெத்தினம் அவர்களின் மகன் திரு.ராபின் குமார் ஆகியோர் சேர்ந்து பாதையை நன்கொடை பத்திரம் எண்.115/2014–ல் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : நன்கொடை பத்திரம் பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi-425/2014)

**தீர்மானம் எண்.920 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 1–வது வார்டு சாஸ்தன்கரை பகுதியில் நகர புல எண். A1-32/8, A1-32/9A/1A-ல் 4.450 செண்ட் வழிப்பாதை இடத்தினை திருமதி. சுகிதா, கதவு எண்.4/4சி. பூலவிளை என்பவர் நகராட்சிக்கு பாதையை தானப்பத்திரம், பத்திரம் எண்.555/2013–ல் ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : தானப் பத்திரம் பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi-1191/14)

**தீர்மானம் எண்.921 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2–வது வார்டு கொம்பன்விளாகம் பகுதியில் நகர புல எண்.B1-27/9-ல் 3.750 செண்ட் வழிப்பாதை இடத்தினை திருமதி. சுகிதா, கதவு எண்.4–4/சி3. பூலவிளை மற்றும் திருமதி.சி.ராஜம், கதவு எண். 8–92/B, பண்டாரவிளை, மண்டைக்காடு என்பவர்கள் சேர்ந்து நகராட்சிக்கு பாதையை நன்கொடை பத்திரம் எண்.2038/2012–ல் ஒப்படைப்பு செய்துள்ளனர். மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : நன்கொடை பத்திரம் பெற்ற இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi-1192/14)

**தீர்மானம் எண்.922 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால் வடிகால் தூர் வாருதல், கழிவுநீர் ஓடைகள் சுத்தம் செய்தல், குப்பைகள் பெருக்குதல், புகை மருந்து அடித்தல், அபேட் மருந்து தெளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள முடியாமல் பணிகள் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலையினை தவிர்க்க, பொதுசுகாதார நலன் கருதி 10 பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் அமர்த்த கேட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் பதில் கடிதம் ந.க.எண்.எ1/10443/2014 நாள் 07.05.2014–ல் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கோர தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது போதிய துப்புரவு பணியாளர்கள் இல்லாததால் பணியின் அவசர அவசியம் கருதி 89 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.எ1/110610/2013 நாள் 25.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினசரி ஊதியத்தின்படி பணியாளர்களை பணியில் அமர்த்த, நகராட்சி பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்க மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. உத்தேச மதிப்பு ரூ.3.00 இலட்சம் (89 நாட்களுக்கு )

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1177/14)

**தீர்மானம் எண்.923 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பணிபுரிய போதிய பணியாளர்கள் இல்லாமையால் முதல்நிலை சேகரித்தல், இரண்டாம் நிலை சேகரித்தல், மக்கும், மக்காத குப்பைகளை பிரித்தெடுத்தல், குப்பைகளை மக்கச் செய்தல், மக்காத குப்பைகளை பிரித்தெடுத்தல், குப்பைகளை மக்கச் செய்தல், மக்காத குப்பையினை மறுசுழற்சி செய்தல் பணிகளை திறம்பட செயல்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகும். ஆகவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 25 பணியாளர்களை பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற வேண்டியுள்ளது. மேற்படி 25 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.எ1/110610/2013 நாள் 25.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினசரி ஊதியத்தின்படி பணியாளர்களை பணியில் அமர்த்தவும், மேலும் பணியாளர்களுக்கான சீருடைகள், காலனிகள், பாதுகாப்பு பொருட்கள் பெறுவதற்கும் ஆண்டிற்கு ரூ.35,00,000/– (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) வழங்குவதற்கு மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1368/14)

**தீர்மானம் எண்.924 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனியில் அமைந்துள்ள குப்பைக் கிடங்கில் குப்பைகள் நிறைந்து விட்டமையால் மேற்படி குப்பை கிடங்கிலுள்ள குப்பையினை Hitachi மூலம் ஒதுக்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூ.19,000/—க்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசிய அவசரம் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும், நகராட்சியின் சட்டம் பிரிவு (15)—ன் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.எச்1/608/14)

**தீர்மானம் எண்.925 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 22**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1152/14/எம்.சி.எ3 நாள் 09.06.2014—ல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் அம்மா உணவகக் கட்டிடம் கட்டுவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், திட்ட நிதியை எதிர்நோக்கி மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1202/14)

**தீர்மானம் எண்.926 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2014—15 ஆம் ஆண்டிற்கு தேவையான கீழ்காணும் தளவாட பொருட்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(1) சுண்ணாம்பு
(2) பிளீச்சிங்பவுடர்
(3) பினாயில்
(4) மண்வெட்டி பெரியது
(5) மண்வெட்டி சிறியது
(6) பிக்காசு
(7) வெட்டுக்கத்தி
(8) குப்பை அகற்றும் தகடு
(9) பெரிய மாறு
(10) கைமாறு
(11) பிளாஸ்டிக் கூடை (சுண்ணாம்பு அடிப்பது நைலான்)

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1388/09)

**தீர்மானம் எண்.927 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி